சுருக்கம்

பள்ளிக் கல்வி – மேல்நிலைப் பள்ளிகள் – தொழிற்கல்வி – 680 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை–I பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது – தற்போது பணிபுரிந்து வரும் 115 தொழிற்கல்வி பயிற்றுநர் பணியிடங்களுக்கு – 01.10.2020 முதல் 30.09.2021 வரை ஓராண்டிற்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (பக7(1))த் துறை

அரசாணை (1டி) எண்.192

நாள்: 03.12.2020
திருவள்ளுவர் ஆண்டு – 2051
சார்வரி, கார்த்திகை–18
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.358, பள்ளிக் கல்வித் துறை, நாள் 18.8.1997.
2. அரசு கடித (நிலை) எண்.221, பள்ளிக் கல்வி (விஇ) துறை, நாள்.15.07.1999.
3. அரசாணை(2டி) எண்.46, பள்ளிக் கல்வி(விஇ) துறை, நாள் 12.09.2006.
4. அரசாணை (நிலை) எண்.69, பள்ளிக் கல்வி(விஇ) துறை, நாள் 20.03.2007.
5. அரசாணை (1டி) எண்.437, பள்ளிக் கல்வி(பக7(1))த் துறை, நாள் 21.11.2019.
6. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.035394/எல்3/2020, நாள் 06.10.2020.

*******

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (DIET) மூலம் குறுகிய கால பயிற்சி பெற்ற பகுதி நேர தொழிற்கல்வி ஆசிரியர்களை முறையான ஊதிய விகிதத்தில் கொண்டு வரும் பொருட்டு உபரியாக இருந்த 702 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை சரண் செய்து அதற்கு பதிலாக அதே ஊதியம் கொண்ட 702 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை–II பணியிடங்கள் தற்காலிக அடிப்படையில் ஆணை வெளியிடப்படும் நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு மட்டும் அமலில் இருக்கும் வகையில் ஏற்படுத்தியும், அப்பணியிடங்களை தேவைக்கேற்ப அனுமதிப்பது பற்றி முடிவு செய்ய பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி ஒன்று முதல் மூன்று வரை படிக்கப்பட்ட அரசாணைகள் மற்றும் அரசு கடிதங்களின்படி 680 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை–II பணியிடங்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் தேவைக்கேற்ப கீழ்கண்டவாறு ஏற்படுத்தப்பட்டுள்ளது:-

த.பி.பா

| | | |
|---|---|---|
| அரசாணை (நிலை) எண்.358, பள்ளிக் கல்வி, நாள் 18.8.1997. | 557 | 5.10.1996 முதல் |
| அரசுக் கடிதம் (நிலை) எண்.221, பள்ளிக் கல்வி, நாள் 15.7.1999. | 111 | 12.11.1997 முதல் |
| அரசாணை (2டி ) எண்.46, பள்ளிக் கல்வி, நாள் 12.9.2006. | 12 | 8.12.1999 முதல் |
| மொத்தம் | 680 பணியிடங்கள் | |

2. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி தொழிற்கல்வி ஆசிரியர் நிலை–Iஆக நிலை உயர்த்தப்பட்ட 680 தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடங்களில் ஒய்வு பெற்றவர்கள் போக மீதமுள்ள 115 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை–I பணியிடங்களுக்கு மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 01.10.2019 முதல் 30.09.2020 வரை தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தற்போது மேற்காணும் 115 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை–I பணியிடங்களுக்கு மட்டும் 01.10.2020 முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குமாறு மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, மேலே பத்தி 1ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகளின்படி தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 680 தொழிற்கல்வி ஆசிரியர் (நிலை–Iஆக நிலை உயர்த்தப்பட்ட) பணியிடங்களுள் ஒய்வு பெற்றவர்களின் பணியிடங்கள் 565 போக மீதமுள்ள இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 115 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை–I பணியிடங்களுக்கு 01.10.2020 முதல் 30.09.2021 வரை ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்க முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இப்பணியிடங்களில் பணிபுரிபவர்கள் அடிப்படை ஊதியம் உள்ளிட்ட பணப்பலன்களை நடைமுறையில் உள்ள விதிகளின்படி பெறத் தகுதியானவர்களாவர். இப்பணியிடங்களுக்கான ஊதியம் மற்றும் படிகளுக்கான செலவினம் கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

"<u>அரசுப்பள்ளிகள்</u>

2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி–109 அரசு இடைநிலைப் பள்ளிகள்– மாநிலச் செலவினங்கள் – AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம்–301– சம்பளங்கள் (த.தொ.கு.2202 02 109 AA 30100)"

"<u>நகராட்சி/மாநகராட்சி பள்ளிகள்</u>

2202 பொதுக்கல்வி –02 இடைநிலைக் கல்வி –109 அரசு இடைநிலைப் பள்ளிகள்– மாநிலச் செலவினங்கள் – AB நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை / மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் – 301 சம்பளங்கள் (த.தொ.கு.2202 02 109 AB 30100). "

"<u>அரசு உதவி பெறும் பள்ளிகள்</u>

2202 பொதுக் கல்வி –02 இடைநிலைக் கல்வி – 110 –அரசு சாரா இடைநிலைப் பள்ளிகளுக்கு நிதி உதவி– மாநிலச் செலவினங்கள் – AA அரசு மானியம் பெறும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு நிதியுதவி – 379 சம்பள மானியங்கள் (த.தொ.கு.2202 02 110 AA 37900). "

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.39795/கல்வி–II/2020 நாள் 30.11.2020–ல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தீரஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
√பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை –18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 79/35/5.
சார் சம்பளக் கணக்கு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
கருவூல கணக்கு அலுவலர், சென்னை–5.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.

<u>நகல்:</u>
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
நிதி (கல்வி II) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

7/12/2020

பிரிவு அலுவலர்

07/12/2020

ந.க.எண்.035394/அ1/இ3/2020 நாள்: 08.12.2020

(நகல்) தகவலுக்காகவும், தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

<u>பெறுநர்</u>
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

08/12/2020
Director of School Education
Chennai-600 006.

8/12/2020

**அரசாணை(1டி) எண்.192, பள்ளிக் கல்வி(பக7(1))த் துறை, நாள் 03.12.2020இன் இணைப்பு**

அரசாணை (1டி) எண்.358 பள்ளிக் கல்வித் துறை, நாள் 18.08.1997, அரசு கடிதம் (நிலை) எண்.221, பள்ளிக் கல்வித் துறை, நாள் 15.07.1999, அரசாணை(2டி) எண்.46, பள்ளிக் கல்வித் துறை, நாள் 12.04.2006–ன்படி உருவாக்கப்பட்ட பணியிட விவரம்

புதிய ஊதிய விகிதம் ஊதியம் ரூ.36400–ரூ.115700 (நிலை 16)

| வ. எண் | மாவட்டம் | பள்ளிகளின் வரிசை எண். | பள்ளிகளின் பெயர் | பள்ளி வாரியாக அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | பணிபுரியும் ஆசிரியர் எண்ணிக்கை | தொடர் நீட்டிப்பு காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி | | | | 11 | 01.10.2020 முதல் 30.09.2021 வரை |
| | கன்னியாகுமரி | 1 | அரசு மேல்நிலைப் பள்ளி, குலசேகரம் | 2 | | |
| | | 2 | டதி (ம) மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் | 1 | | |
| | | 3 | அரசு மேல்நிலைப் பள்ளி, ஆரல்வாய்மொழி | 1 | | |
| | | 4 | அரசு (ஆ) மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம் | 2 | | |
| | | 5 | உதவிபெறும் மேல்நிலைப் பள்ளி, கல்லுபாலம் | 1 | | |
| | | 6 | புனித அலோசியஸ் மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம்துறை | 2 | | |
| | | 7 | எல். எம். எஸ். (ம) மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம் | 2 | | |
| | | | மொத்தம் | 11 | | |
| 2 | திருநெல்வேலி | | | | 7 | |
| | திருநெல்வேலி | 1 | அரசு (ம) மேல்நிலைப்பள்ளி சங்கரன்கோவில். | 1 | | |
| | | 2 | கோ.நா.அரசு மேல்நிலைப் பள்ளி, குருவிகுளம். | 1 | | |
| | | 3 | அரசு மேல்நிலைப்பள்ளி, வள்ளியூர். | 1 | | |
| | | 4 | ச.ரெ.அரசு மேல்நிலைப்பள்ளி, நாங்குநேரி. | 1 | | |
| | | 5 | அரசு மேல்நிலைப்பள்ளி, புல்லுக்காட்டுவலசை | 1 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 6 | அரசு (ம) மேல்நிலைப்பள்ளி, தென்காசி | 1 | | 01.10.2020 முதல் 30.09.2021 வரை |
| | | 7 | அமலி (ம) மேல்நிலைப்பள்ளி, இருதயகுளம் | 1 | | |
| | | மொத்தம் | | 7 | | |
| 3 | தூத்துக்குடி | | | | 2 | |
| | தூத்துக்குடி | 1 | சாமி அய்யா நாடார் மேல்நிலைப்பள்ளி, நாகலாபுரம் | 1 | | |
| | | 2 | காரப்பேட்டை நாடார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி | 1 | | |
| | | மொத்தம் | | 2 | | |
| 4 | இராமநாதபுரம் | | | | 4 | |
| | இராமநாதபுரம் | 1 | அரசு மேல்நிலைப் பள்ளி, கடுக்காய்வலசை | 1 | | |
| | | 2 | அரசு மேல்நிலைப் பள்ளி, தேவிபட்டிணம் | 1 | | |
| | | 3 | ஆர்.எஸ். அரசு (ஆ) மேல்நிலைப் பள்ளி, பரமக்குடி | 1 | | |
| | | 4 | ஷத்திரிய நாடார் (ஆ) மேல்நிலைப் பள்ளி, கமுதி | 1 | | |
| | | மொத்தம் | | 4 | | |
| 5 | சிவகங்கை | | | | 2 | |
| | சிவகங்கை | 1 | அரசு மேல்நிலைப்பள்ளி, அ.முறையூர் | 1 | | |
| | | 2 | அரசு (ம) மேல்நிலைப்பள்ளி, சிவகங்கை. | 1 | | |
| | | மொத்தம் | | 2 | | |
| 6 | மதுரை | | | | 5 | |
| | மதுரை | 1 | புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி, மதுரை. | 1 | | |
| | | 2 | அரசு மேல்நிலைப்பள்ளி, சமயநல்லூர் | 1 | | |
| | | 3 | அரசு மேல்நிலைப்பள்ளி, சமயநல்லூர் | 1 | | |
| | | 4 | சௌராஷ்டிரா மகளிர் மேல்நிலைப்பள்ளி, மதுரை | 1 | | |
| | | 5 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருமங்கலம். | 1 | | |
| | | மொத்தம் | | 5 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | திண்டுக்கல் | | | | 2 | |
| | திண்டுக்கல் | 1 | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கன்னிவாடி | 1 | | |
| | | 2 | நேருஜி நினைவு நகரவை மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல் | 1 | | |
| | | | மொத்தம் | 2 | | |
| 8 | நீலகிரி | | | | 3 | 01.10.2020 முதல் 30.09.2021 வரை |
| | நீலகிரி | 1 | அரசு மேல்நிலைப் பள்ளி, உதகை | 2 | | |
| | | 2 | அரசு மேல்நிலைப் பள்ளி, காத்தாடிமட்டம் | 1 | | |
| | | | மொத்தம் | 3 | | |
| 9 | கோயம்புத்தூர் | | | | 3 | |
| | கோயம்புத்தூர் | 1 | அரசு மேல்நிலைப்பள்ளி வெள்ளக்கிணர், கோயம்புத்தூர். | 1 | | |
| | | 2 | கதிரி மில்ஸ் மேல்நிலைப் பள்ளி ஒட்டர்பாளையம், கோவை. | 1 | | |
| | | 3 | ஸ்ரீ ராம கிருஷ்ணா மிஷன் வித்யாலய சுவாமி சிவானந்தா மேல்நிலைப் பள்ளி, பெரியநாயக்கன் பாளையம், கோயம்புத்தூர். | 1 | | |
| | | | மொத்தம் | 3 | | |
| 10 | திருப்பூர் | | | | 1 | |
| | | 1 | கே.எஸ்.சி.அரசு மேல்நிலைப் பள்ளி | 1 | | |
| | | | மொத்தம் | 1 | | |
| 11 | ஈரோடு | | | | 4 | |
| | ஈரோடு | 1 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மொடக்குறிச்சி | 2 | | |
| | | 2 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சிவகிரி | 1 | | |
| | | 3 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பெருந்துறை | 1 | | |
| | | | மொத்தம் | 4 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | சேலம் | | | | 11 | 01.10.2020 முதல் 30.09.2021 வரை |
| | சேலம் | 1 | வாழப்பாடி ஆண்கள்மேல்நிலைப்பள்ளி | 1 | | |
| | | 2 | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, பெத்தநாயக்கன்பாளையம் | 1 | | |
| | | 3 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பெத்தநாயக்கன்பாளையம், சேலம். | 1 | | |
| | | 4 | நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளி,குகை, சேலம். | 1 | | |
| | | 5 | சிறுமலர் மேல்நிலைப்பள்ளி , சேலம் . | 2 | | |
| | | 6 | பாத்திமா மகளிர் மேல்நிலைப்பள்ளி ஓமலூர் | 1 | | |
| | | 7 | செங்குந்தர் மகாசன மேல் நிலைப் பள்ளி, தாரமங்கலம் | 2 | | |
| | | 8 | நீலாம்பாள் சுப்ரமணியம் மேல்நிலைப்பள்ளி, சூரமங்கலம், சேலம். | 1 | | |
| | | 9 | புனித மரியன்னை மகளிர் மேல்நிலைப்பள்ளி, சேலம். | 1 | | |
| | | | மொத்தம் | 11 | | |
| 13 | நாமக்கல் | | | | 6 | |
| | நாமக்கல் | 1 | அரசு மேல்நிலைப் பள்ளி, கந்தம் பாளையம் | 1 | | |
| | | 2 | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, திருசெங்கோடு | 3 | | |
| | | 3 | அரசு மேல்நிலைப் பள்ளி, அண்ணாசாலை, இராசிபுரம் | 1 | | |
| | | 4 | அரசு மேல்நிலைப் பள்ளி, பாலப்பட்டி | 1 | | |
| | | | மொத்தம் | 6 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14 | கிருஷ்ணகிரி | | | | 6 | 01.10.2020 முதல் 30.09.2021 வரை |
| | கிருஷ்ணகிரி | 1 | அரசு மேல்நிலைப் பள்ளி, காவேரிப்பட்டிணம் (ஆண்கள்) | 2 | | |
| | | 2 | அரசு மேல்நிலைப் பள்ளி, போச்சம்பள்ளி (ஆண்கள்) | 1 | | |
| | | 3 | அரசு மேல்நிலைப் பள்ளி, நாகசரம்பட்டி (ஆண்கள்) | 1 | | |
| | | 4 | அரசு மேல்நிலைப் பள்ளி, ஒசூர் (மகளிர்) | 1 | | |
| | | 5 | அரசு மேல்நிலைப் பள்ளி, காவேரிப்பட்டிணம் (மகளிர்) | 1 | | |
| | | | மொத்தம் | 6 | | |
| 15 | தருமபுரி | | | | 1 | |
| | | 1 | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, பாப்பிரெட்டிப்பட்டி | 1 | | |
| | | | மொத்தம் | 1 | | |
| 16 | கரூர் | | | | 3 | |
| | கரூர் | 1 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி புகழூர் | 1 | | |
| | | 2 | நகராட்சி மேல்நிலைப் பள்ளி, கரூர் | 1 | | |
| | | 3 | உஸ்வத்துன் ஹஸானா ஓரியண்டல் அராபிக் மகளிர் மேல்நிலைப் பள்ளி பள்ளபட்டி | 1 | | |
| | | | மொத்தம் | 3 | | |
| 17 | அரியலூர் | | | | 6 | |
| | அரியலூர் | 1 | அரசு மேல்நிலைப்பள்ளி, அரியலூர் | 1 | | |
| | | 2 | அரசு மேல்நிலைப்பள்ளி, ஜெயங்கொண்டம் | 3 | | |
| | | 3 | அரசு மேல்நிலைப்பள்ளி, விளந்தை ஆண்டிமடம் | 2 | | |
| | | | மொத்தம் | 6 | | |
| 18 | பெரம்பலூர் | | | | 2 | |
| | | 1 | அரசு மேல்நிலைப்பபள்ளி, பெரம்பலூர் | 2 | | |
| | | | மொத்தம் | 2 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 19 | திருவாரூர் | | | | 10 | 01.10.2020 முதல் 30.09.2021 வரை |
| | திருவாரூர் | 1 | கே.எஸ்.சி. அரசு மேல்நிலைப் பள்ளி | 1 | | |
| | | 2 | அரசு மேல்நிலைப்பள்ளி ஆலத்தம்பாடி | 1 | | |
| | | 3 | அரசு பெண்கள்மேல் நிலைப்பள்ளி குடவாசல் | 1 | | |
| | | 4 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நன்னிலம் | 1 | | |
| | | 5 | அரசு மேல்நிலைப்பள்ளி பரவாக்கோட்டை | 1 | | |
| | | 6 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பொதக்குடி | 1 | | |
| | | 7 | தேசியமேல்நிலைப்பள்ளி மன்னார்குடி | 1 | | |
| | | 8 | பின்லே மேல்நிலைப்பள்ளி மன்னார்குடி | 1 | | |
| | | 9 | வடுவூர் மேல்நிலைப்பள்ளி வடுவூர் | 1 | | |
| | | 10 | சுவாமிதயானந்தா மேல்நிலைப்பள்ளி மஞ்சக்குடி | 1 | | |
| | | மொத்தம் | | 10 | | |
| 20 | தஞ்சாவூர் | | | | 4 | |
| | தஞ்சாவூர் | 1 | தூய வளனார் (ம) மேல்நிலைப்பள்ளி, கும்பகோணம். | 1 | | |
| | | 2 | நகர மேல்நிலைப்பள்ளி, கும்பகோணம். | 1 | | |
| | | 3 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஒரத்தநாடு | 1 | | |
| | | 4 | அரசு மேல்நிலைப்பள்ளி மேல உளூர் | 1 | | |
| | | மொத்தம் | | 4 | | |
| 21 | கடலூர் | | | | 4 | |
| | கடலூர் | 1 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, புவனகிரி. | 1 | | |
| | | 2 | நகராட்சி மேல்நிலைப்பள்ளி, கடலூர். | 1 | | |
| | | 3 | அரசு மேல்நிலைப்பள்ளி, மங்கலம்பேட்டை. | 1 | | |
| | | 4 | புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி, கடலூர். | 1 | | |
| | | மொத்தம் | | 4 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22 | திருவண்ணாமலை | | | | 7 | 01.10.2020 முதல் 30.09.2021 வரை |
| | திருவண்ணாமலை | 1 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, போளூர் | 2 | | |
| | | 2 | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, போளூர் | 1 | | |
| | | 3 | அரசு மேல்நிலைப்பள்ளி, செங்கோடு | 1 | | |
| | | 4 | செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளி, அத்திப்பட்டு | 1 | | |
| | | 5 | அரசு மேல்நிலைப்பள்ளி , தெள்ளாறு | 1 | | |
| | | 6 | அரசு மேல்நிலைப்பள்ளி பெரணமல்லூர் | 1 | | |
| | | மொத்தம் | | 7 | | |
| 23 | வேலூர் | | | | 3 | |
| | வேலூர் | 1 | அரசு மேல்நிலைப்பள்ளி வெண்ணம்பள்ளி | 1 | | |
| | | 2 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருப்பத்தூர் | 1 | | |
| | | 3 | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, சோளிங்கர் | 1 | | |
| | | மொத்தம் | | 3 | | |
| 24 | திருவள்ளூர் | | | | 4 | |
| | திருவள்ளூர் | 1 | டாக்டர் ராதாகிருஷ்ணன் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருத்தணி | 1 | | |
| | | 2 | அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளி, பூந்தமல்லி | 3 | | |
| | | மொத்தம் | | 4 | | |
| 25 | சென்னை | | | | 4 | |
| | சென்னை | 1 | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, வில்லிவாக்கம், சென்னை–49 | 1 | | |
| | | 2 | அறிஞர் அண்ணா மேல்நிலைப் பள்ளி, உரூர், அடையார், சென்னை–90 | 1 | | |
| | | 3 | சென்னை மேல்நிலைப் பள்ளி, சி.ஐ.டி.நகர், நந்தனம், சென்னை–35 | 1 | | |
| | | 4 | சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, நுங்கம்பாக்கம், சென்னை.34 | 1 | | |
| | | மொத்தம் | | 4 | | |
| மொத்த பணியிடங்கள் | | | | | 115 | |

தீரஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்